அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 302

அரசாங்க நிருவாக அமைச்சு
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
26 ஜூலை, 1985

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

வெளிநாட்டில் பணிக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்
களின் வாழ்க்கைத் துணைகளுக்கு சம்பளமற்ற லீவு

---

சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு அவரது வாழ்க்கைத் துணை தொழில் நிமித்தமாக வெளிநாட்டில் இருக்கும் பொழுது அவருடன்/அவளுடன் அசர்ந்து கொள்வதற்காக சம்பளமற்ற லீவு வழங்கப்படும்

(அ) இந்த லீவானது சம்பள ஏற்றம் பற்றிய விடயங்களின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

அவர்/அவள் திரும்பி வந்தவிடத்து அவர்/அவள் அங்ஙனம் வெளி நாட்டுக்குப் போயிராவிடில் எந்தச் சம்பளப் படிநிலையை அடைந் திருப்பாரோ அதில் அமர்த்தலாம் எனினும் சாதாரணமானதொரு சூழ்நிலையில் சம்பளவேற்றத்தை வழங்குவதற்கு அவரை/அவளை தகைமையற்றவராக்கக் கூடிய அவருடைய/அவளுடைய சம்பளமற்ற லீவுக் காலத்தின் வேலையையும் நடத்தையையும் பற்றி அவருக்கு/அவளுக்குச் சம்பளவேற்றத்தை வழங்கும் அதிகாரிக்குப் பாதகமான அறிக்கை எதுவும் விடுக்கப்படாதபட்சத்தில் மட்டுமே இது சாத்திய மாகும்.

(ஆ) சம்பளமற்ற லீவுக் காலத்தில் பெற்றுக் கொண்ட சம்பளவேற்றங் களுக்கு நிலுவைகள் வழங்கப்படுதலாகாது.

(இ) இந்தச் சுற்றறிக்கைப் பிரகாரம் வழங்கப்படும் லீவானது ஓய்வூதிய நோக்கங்களுக்காக கவனத்திற் கொள்ளப்படும்.

(ஈ) கீழ்க்காணும் ஏற்பாடுகளுக்கிணங்க இந்தச் சம்பளமற்ற லீவைப் பெறுவதனால் ஒரு உத்தியோகத்தரின் முதுமுறை பாதிப்புறுது.

(1) இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளமற்ற லீவைப்பெற்ற ஒரு உத்தியோகத்தருக்கு அவரது/அவளது சம்பளமற்ற விடு முறைக் காலத்தில் ஏற்படும் எந்தப் பதவி வெற்றிடத்துக்கும் பதவியேற்றம் வழங்குவது பற்றிக் கவனத்திற் கொள்ளுதலாகாது

(11) பதவியேற்றத்துக்குரிய தகைமையென குறைந்த சேவைக் கால மொன்றை ஆட்சேர்ப்புத் திட்டம் விதிக்குமானால் இந்தச் சுற் றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படும் சம்பளமற்ற லவுக்கால மானது அந்த குறைந்த சேவைக் காலத்தைக் கணிக்குமிடத்து கவனத்திற் கொள்ளப்படுதலாகாது.

(உ) பதவியேற்றம் பெறுதற்குத் தகுதியுடையவரெனக் கருதுதற்கு குறிப் பிட்டதொரு சம்பளப் படிநிலையை அடைய வேண்டுமென ஆட்சேர்ப்புத் திட்டமொன்று குறிப்பிடும் பட்சத்தில் இந்தச் சுற்றறிக்கையின் 1(அ)-ஆம் பந்தியின் நிபந்தனைகளுக்கிணங்க வழங்கப்பட்ட எந்தச் சம்பள ஏற்றத்தையும் பதவியேற்ற நோக்கங்களுக்கான சம்பளப் படி நிலையைக் கணிக்கும் பொழுது கவனத்திற் கொள்ளுதலாகாது.

02. இந்தத் தீர்மானமானது இதற்கு முந்திய சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை நிமித்தம் வெளிநாட்டிலிருந்த தங்கள் கணவன்மாருடன்/மனைவியருடன் சேர்ந்து கொள்வதற்காக சம்பளமற்ற லீவில் சென்ற வாழ்க்கைத் துணைவர்கள் அனைவரது விடயத்திலும் செல்லுபடியாகும்.

03. சம்பளமற்ற லீவு வழங்குவது பற்றிய தாபனக் கோவையின் ஏனைய ஏற்பாடுகளில் மாற்றம் இல்லை.

ஒப்பம்: டி.பி.ஐ.பீ.எஸ்.சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.